www.padippakam.com

# அகதியான போது ..................



-------------------------------------------------------------------------------ரஹீம்ராஜி

**------(சமூக துரோகிகளை,அரசியல் வாதிகளின் உண்மை தோற்றத்தை அம்பலப்படுத்தும் புதிய தொடர் )----(This will be updated every Friday night)**

**பாகம் 7**

ஜி.சி .ஈ உயர்தர பரீட்சை எழுதி விட்டு பெறுபேற்றுக்காக காத்திருந்த

அந்த பொழுதுகளில் ஏற்கனவே நான் செய்திருந்த பல கணணி,மற்றும்

இன்னோரன்ன பயிற்சிகளை வைத்து வேலை தேடிக்கொண்டிருந்தேன்.

அந்த மறக்க முடியாத பொழுதுகள் இன்னமும் ஞாபகம் இருக்கிறது.

தெகிவளையில் எனது குடும்பம் இடம்பெயர்ந்து இருந்த காலம் அது.

ஒவ்வொரு முறையும் பத்திரிகைகளைப்பார்த்து அரச கேசட்டுகளை பார்த்தும்

இருந்த பழைய டைப் ரைட்டரை பயன்படுத்தி பயோ டேட்டாக்கள் அடிப்பதும்

அனுப்புவதுமாக இருந்தேன்.வேலை எதுவென்றாலும் செய்யும் அளவுக்கு

தள்ளப்பட்டேன்.வறுமையின் இறுக்கம் பல தடவைகளில் விழிகளில் கண்ணீரையும்

இதயத்தில் பாரத்தையும் ஏற்படுத்திக்கொண்டிருந்தது .

www.padippakam.com

ஒவ்வொரு நாளும் நூலகம் செல்வதும்,இலவச பத்திரிக்கைகளில் வேலைவாய்ப்பு பார்ப்பதும்,தேடுவதும் வாடிக்கையாகி இருந்தது.

விண்ணப்பிக்கும் வேலைகளுக்கு பலதடவைகளில் பதில் வராது.சில தடவைகளில் வரும். வேலைகளில் வேலை இல்லை என்று பதில் வரும். ஓரிரு முறை நேர் முகப்பரீட்சைகளை தோற்றிய போதும் சிபாரிசு எதுவும் இல்லாததால் ஏமாற்றம் மட்டும் தேங்கி நின்றது.

புதிதாக எனக்கு தோன்றிய யோசனையின் படி yellow pages இல் பார்த்து அதில் உள்ள கம்பனிகளின் விலாசங்களை எடுத்து அந்த கம்பனிகளுக்கு சென்று வேலை தேடினேன்.நேரடி விடையாக 'வேலை இல்லை'என்றே பதில் வந்தது.

இவ்வாறுதான் ஒரு முறை பம்பலப்பிட்டியாவில் உள்ள ஓடிட் நிறுவனம் ஒன்றுக்கு நேராக சென்று வேலை கேட்டேன். அந்த நிறுவனத்தின் முகாமையாளராக அல்லது நிர்வாக பணிப்பாளராக இருந்த ஒருவர் என்னை அழைத்து விசாரித்தார்.

எப்படி அந்த நிறுவனம் பற்றி தெரியும் என்று கேட்டார்.yellow page இல் தகவலை எடுத்ததாக கூறினேன் .என்னைப்பற்றியும் எனது பிறந்த இடத்தை பற்றியும் விசாரித்த பின்னர் நான் ஒரு புலியாக இருக்கக்கூடும் எப்படி இவ்வாறு

படிப்பகம்

www.padippakam.com

வேலை தருவது என்று கடுமையான குரலில் கூறப்பட்டேன்.நான் முஸ்லீம் என்ற போது, முஸ்லீம் புலியாக இருக்கக்கூடும் என்று கூறப்பட்டேன். பதினைந்து நிமிடமாக அந்த மனிதரின் கடுமையான,உரத்த,பலத்த,விரிவுரையை கேட்டுக்-கொண்டிருந்தேன்.என்னை,என் ஊரை என் வேலை தேடும் பாணியை எல்லாமே அவரால் விமர்சிக்கப்பட்டது.முடிவில் வேலை கிடைக்குமா என்று பொறுமையுடனான நம்பிக்கையில் இருந்தேன்.பேசிப்பேசி களைத்த அம்மனிதரும்,தொண்டை வறண்டு போய் அங்கிருந்து என்னை வெளியேறுமாறு கேட்டார்..எனது வறுமையும்,கஷ்டமான நிலையும் அங்கிருந்து எதுவும் பேசாமல் என்னை வெளியேற்றியது .அங்கிருந்து நேராக வெள்ளவத்தை பள்ளி சென்று உருக்கமான துஆவை கேட்க மட்டும்தான்தான் என்னால் முடிந்தது .

இல்யாஸ் தொடங்கி,அவரின் தலைவர் வரை என் குடும்ப நிலையை விளக்கி பக்கம் பக்கமாக பல கடிதங்கள் எழுதியும் கடிதம் கிடைத்தமைக்கு கூட ஒரு பதிலும் வராத நிலை.சுமார் நூற்றுக்கணக்கான விண்ணப்பங்கள் பல நேர்முகப் பரீட்சைகள் என்று படியேறிப்பயன் இன்றி களைத்ததுதான் மிச்சம்.

முஸ்லீம் காங்கிரசின் முன்னாள் மூத்த துணைத்தலைவர் எனது உறவினராக இருந்தாலும் புதிய பதவியும்,புதிய சொகுசுகளும் உறவுகளை மறக்கடிக்கச்செய்து இருந்தது.கண்டும் காணாத நிலையில் கடுமையாக நிதி விவகாரங்களில் அவர் அக்கறை காட்டிக்கொண்டிருந்தார் அப்போது.அவரது நெருங்கிய உறவினர் ஒருவர் ஒரு இலட்சம் வாங்கிக்கொண்டு துறைமுகத்தில் வேலை வாங்கி கொடுப்பதாக

படிப்பகம்

www.padippakam.com

கேள்விப்பட்டது.அந்த ஒரு இலட்ச்சத்துக்கு நான் எங்கு போவது?

சரி முஸ்லீம் காங்கிரஸ் தலைவரை நேராக சந்திப்போம் என்று துறைமுகத்துக்கு முன் அதிகாலையில் கியூவில் நின்று இருமுறை தோல்வியுடன் திரும்பினேன்.

மூன்றாவது முறை கியூவில் நின்றபோது ஒருமாதிரியாக உள்ளே போக கிடைத்து.தலைவரின் பாரியார் உள்ளே இருந்தார்.என்ன பிரச்சினை என்று கேட்டார். (தொடரும்)

படிப்பகம்

www.padippakam.com
படிப்பகம்